## நீதிச்சேவை ஆணைக்குழு

## அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல்– 2021

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் **மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுவதற்காக** தகைமையுடைய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருவதற்கான அறிவித்தலொன்று இலக்கம் 2228 மற்றும் 13.05.2021 ஆம் திகதியுடைய வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியினை தற்போது நடைமுறையில் உள்ள பயணக்கட்டுப்பாடு நிலையினை கருத்தில் கொண்டு நீடிப்பதற்கு நீதிச்சேவை ஆணைக்குழுத் தீர்மானித்துள்ளது.

2. அதன் அடிப்படையில் அவ் அறிவித்தலின் 10வது பந்தியானது கீழ்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

அ) விண்ணப்ப படிவ கட்டணம் ரூ.500. **“நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்”** பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் **297 100 199 025 039** கணக்கிற்கு எந்த வெரு மக்கள் வங்கி கிளையிலும் வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பதாரியின் பெயர் முகவரி எழுதப்பட்ட 9 x 4 அளவுடைய கடித உறையுடன் பதிவுத்தபாலில் அனுப்புவதினூடாக அல்லது நேரடியாக வந்து ஒப்படைப்பதன் மூலம் விண்ணப்ப படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும். அல்லது அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்தில் பணம் வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை ஒட்டி அனுப்பவும் முடியும்.

ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 09.07.2021 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும் வகையில் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு விண்ணப்பதாரி நேரடியாக வருகை தந்து விண்ணப்பப்படிவங்களை கையளிக்க வேண்டும்.

3. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றங்களின்றி செல்லுபடியாகும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கையொப்பமிட்டது

எச்.எஸ். சோமரத்ன
செயலாளர்
நீதிச்சேவைஆணைக்குழு

17 ஆம் திகதி ஜுன் மாதம் 2021

நீதிச்சேவைஆணைக்குழுச் செயலகத்தில்